கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 28.03.2013

தேனீ 10 ஆண்டுகள் 22.02.2001 - 22.02.2011

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
காத்தான்குடி இன்போ
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (84)

84.மேலும் சிலர் கடத்தப்பட்டு கொண்டு வரப்பட்டனர்!

அடுத்த சில வாரங்களில் எனக்கு நன்கு பரிச்சயமான மேலும் இரண்டு பேர்களைப் புலிகள் கடத்தி, என்னைத் தடுத்து வைத்திருந்த ஆனைக்கோட்டை வதை முகாமக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

ஒருவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற, எந்திரவியல் பொறியியலாளரான கரவெட்டியைச் சேர்ந்த வீரகத்தி சேந்தன். கரவெட்டியில் மிகப்பிரபலமான இவரது தந்தையார் பண்டிதர் க.வீரகத்தி அவர்கள் எனக்கு மிகவும் பரிச்சயமானவர்.

மிகுந்த தமிழ்ப் புலமையும் இலக்கணப் புலமையும் கொண்ட வீரகத்தி மிகவும் நகைச்சுவையாகப் பேசுவதிலும் வல்லவர். இவர் எமது கட்சியைச் சார்ந்தவர் இல்லையென்ற போதிலும், இவரும் இவரைப் போன்ற பலரும் இவர்களால் 'கந்தையா அண்ணை' என அழைக்கப்பட்ட பொன்.கந்தையா அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக பருத்தித்துறைத் தொகுதியில் 1956 பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்குப் பக்கபலமாக இருந்தவர்கள். அதனால் தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றி வந்த தமிழ் காங்கிரஸ், தமிழரசு கட்சிகள் மீது நகைச்சுவையுடனும், கடுமையாகவும் விமர்சனம் செய்து வந்தார்.

பண்டிதர் வீரகத்தி அவர்கள் 1970களில் அப்போதைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்ட பின்னரே எனக்கு அறிமுகமானார். ஆப்பொழுது அவர் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் குடியிருந்தார். ஆனால் அவரது நகைச்சுவைகள் குறித்தும், அவரது தமிழ் புலமைத்துவம் குறித்தும் எனது வடமராட்சி தோழர்கள், நண்பர்கள் மூலம் ஏற்கெனவே அறிந்திருந்தேன். அதனால் அவரை என்றாவது ஒருநாள் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் எனக்குள் இருந்தது.

நல்லூரில் 'நாவலன் பதிப்பகம்' என்ற ஒரு சிறிய அச்சகத்தை நடாத்தி வந்த நண்பர் ஜேசுதாசன் என்பவரே வீரகத்தியை எனக்கு முதன்முதலில் அறிமுகம் செய்து வைத்தார். (இந்த நாவலன் பதிப்பகத்திலேயே 1971இல் முதன் முதலாக நாம் நடாத்தி வந்த கிளிநொச்சி கலாச்சாரப் பேரவை வெளியிட்ட 'களனி' என்ற காலாண்டு சஞ்கிகையை அச்சிட்டு வெளியிட்டோம். நண்பர் ஜேசுதாசன் அவர்களே அச்சுத் தொழிலில் எனக்கு ஆர்வத்தையும் ஏற்படுத்தியவர்) அந்த நேரத்தில் (சென்னையில் என்று நினைக்கிறேன்) உலகத் தமிழாராட்சி மாநாட்டில் கலந்துகொள்ள இருந்த பண்டிதர் வீரகத்தி, தான் ஆரம்பிக்க எண்ணியிருந்த 'கிருதயுகம்' என்ற கலை இலக்கிய சஞ்சிகையை மிக அவசரமாக எமது 'நோதேர்ண் பிறின்ரேர்ஸ்' அச்சகத்தில் அச்சிடுட்டு அங்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்காக, ஜேசுதாசன் அவர்களால் அவர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

அன்றிலிருந்து பண்டிதர் வீரகத்தி எனக்கு மிகவும் நெருக்கமான ஒருவரானார். பின்னர் அவர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள கலட்டிச் சந்தியிலும், பின்னர் இராசவீதியில் பேராசரியர் க.கைலாசபதி அவர்களின் வீட்டிலுற்கு அருகிலும் வாழ்ந்தார். அந்தக் காலங்களில் அவர் பெரும்பாலும் தினசரி யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாக இருந்த பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரைச் சந்திக்க வரும் நேரங்களில், பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இருந்த எனது புத்தகக் கடையில் சில மணி நேரங்களில் உட்கார்ந்து என்னுடன் உரையாடிச் செல்வதுண்டு. அந்த நேரத்தில் அவரது மகள் ஒருவரும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களான கி.ராஜநாராயணன், கோ.ம.கோதண்டம் ஆகியோருக்கு பண்டிதர் வீரகத்தி அவர்கள் வழங்கிய காலை உணவு விருந்துபசாரத்தின் போது என்னையும் அழைத்திருந்தார். அங்கு வைத்தே முதன்முதலில் பண்டிதர் வீரகத்தி தனது மகன் சேந்தன் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது சேந்தன் ஈரானில் ஒர் கம்பனியில் பொறியிலாளராகப் பணிபுரிந்துவிட்டு, தான் உழைத்த பெரும்தொகையான பணத்தை அங்கு பணிபுரிந்த பலரின் தேவைகளுக்கும் வழங்கிவிட்டு, ஒரு வானொலிப் பெட்டியையும், ஒரு சான்றுப் பத்திரத்தையும் மட்டும் உடமையாகக் கொண்டு நாடு திரும்பியிருந்தார். அந்தச் சான்றிதழின் பின்பக்கத்திலும்கூட சேந்தன் ஒரு கவிதை எழுதி இருப்பதை எனக்கு வீரகத்தி; காண்பித்தார்!

பிற்காலத்தில் சேந்தன் உட்பட அநேகமாக பண்டிதர் வீரகத்தி குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் எனக்குப் பரிச்சயமானார்கள்.

பின்னர் சேந்தன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் எமது யாழ் புத்தக நிலையத்துக்கு அருகாமையில் ஒரு பொறியியல் தொழில் பட்டறையை ஆரம்பித்து நடாத்தி வந்த காலத்தில்தான், எனக்கு மேலும் அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சேந்தன் தனது தந்தை வீரகத்தியைப் போலவே, நகைச்சுவையுடன் அரசியல் மற்றும பொது விடயங்களை விமர்சனம் செய்வார். அவரது வேலைத்தலத்துக்கு பலவிதமான

டான் யாழ்ஒளி
Live from Europe
Dan யாழ்ஒளி



புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்

புலம்பெயர் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் தங்களை மனித உரிமைக் காவலர்களைப்போல் காட்டிக்கொள்கிறார்கள்.

கதம்பமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை: கலக்கமான இலங்கைத் தமிழரின் அரசியல் எதிர்காலம்

அரசியல் தீர்வைப் பின்தள்ளும் பிழையான மூலோபாயம்

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பூட்டும் பிரச்சாரத்தை நிறுத்துங்கள்

Thendral Radio

நபர்கள் வந்து செல்வதுண்டு. அவர்களுள் என்.எல்.எப்.ரி தோழர்கள் விசுவானந்ததேவன், விவேகானந்தன்(அன்ரன்), டக்ளஸ் தேவானந்தாவின் தந்தையார் தோழர் கதிரவேலு எனப் பலர் அங்கு வந்து உரையாடிச் செல்வதுண்டு. புலிகள் சம்பந்தமாகவும், வேறு சில ஆயுதக் குழுக்கள் சம்பந்தமாகவும் சேந்தன் காரசாரமான விமர்சனங்கள் செய்வதுண்டு.

இந்தச் சூழ்நிலையில் சேந்தன் புலிகளால் கைது செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்டது எதற்காக என்பதை ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தாலும், குறிப்பான காரணம் என்ன என்பதை அறிய முடியவில்லை.

ஒர் இரவு வேளை நான் சிறைக்குள் இருந்த வேளை, சிறைச் சுவர்களுக்கு வெளியே, "ஏன் என்னை அடிக்கிறீர்கள்?" என்ற ஒரு குரல் மிக உயரத்தில் இருந்த சிறைச்சாலை யன்னலுக்கூடாகக் கேட்டது. கேட்ட குரல் மிகவும் பரிச்சயமானதாக இருந்தது. பதிலுக்கு ஒரு குரல் உறுமலாகக் கேட்டது. அது அந்த முகாமின் பொறுப்பாளன் காந்தி என்பவனுடையது என்பது புரிந்தது. சிறிது நேரத்தில் சேந்தனை சிறைக்குள் கொண்டு வந்து சில புலி உறுப்பினர்கள் தள்ளிவிட்டனர். நாங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை.

ஆனால் அடுத்த நாள் காலை முதல் வேலையாக வந்திருப்பவர் எனக்குத் தெரிந்தவர் என்பதைக் காந்திக்குத் தெரியப்படுத்தினேன். இந்த நடைமுறையை நான் ஒரு தற்காப்புச் செயலாகக் கருதிச் செய்து வந்தேன். அதன்மூலம் எனக்கும் வந்திருப்பவருக்கும் பாதுகாப்பாக இருக்கும் எனக் கருதினேன். ஏனெனில் ஆனானப்பட்ட புலிகள் எம்மைச் சோதிப்பதற்காகவும், எமக்குத் தெரிந்த சிலரை எமது சிறைக்குள் அனுப்பி வைப்பார்கள். அதன்பின் நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கதைக்கிறோமா என்பதைக் கண்காணித்து, எம்மைச் சிக்கலில் மாட்டி வைக்க முயற்சிப்பார்கள்.

சேந்தன் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்ட இரண்டொரு நாட்களில், வேல்முருகு என்ற ஒரு தோழரைக் கொண்டு வந்தனர். அவர் 1970களில் முரசுமோட்டையில் வாழ்ந்த காலத்தில் எமது கட்சியுடன் இணைந்து வேலை செய்தவர்.

கரைச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளையொன்றின் முகாமையாளராகப் பணிபுரிந்த வேல்முருகு, பின்னர் திருமணம் செய்துகொண்டு, கைது செய்யப்படும் வரை தருமபுரம் கிராமத்தில் உப தபால் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அங்கு ஆசிரியையாக இருந்த அவரது மனைவி, இயக்கச்சிப் பகுதியில் எமது அயல் கிராமத்தைச் சேர்ந்தவர். ஆரம்பக் கல்வியை இயக்கச்சி அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலையில் என்னுடன் ஒன்றாகக் கற்றவர். அவருடைய அண்ணன் சச்சி முருகேசு, 1965 பொதுத்தேர்தலில் வீ.ஆனந்தசங்கரி அவர்கள் கிளிநொச்சித் தொகுதியில் லங்கா சமசமாஜக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட பொழுது, அவருக்காகத் தேர்தல் பணிகள் செய்தவர்.

பூநகரிப் பகுதியில் ஆசிரியப் பணிபுரிந்த நேரத்தில் தேர்தலில் போட்டியிட்ட ஆனந்தசங்கரி, அப்போதைய அரசாங்க விதிகளின்படி தனது ஆசிரியத் தொழிலை இராஜினாமாச் செய்திருந்தார். அதன் பின்னர் ஆனந்தசங்கரி சிறிது காலம் வேலையற்றிருந்த காலத்தில், அவரது மனைவி இயக்கச்சிப் பாடசாலையில் கல்வி கற்பித்த காரணத்தால்;, சச்சி முருகேசுவின் இயக்கச்சி - கொற்றாண்டார்குளத்திலிருந்த வீட்டிலேயே ஆனந்தசங்கரியின் குடும்பம் குடியிருந்தது.

பின்னர் சச்சி முருகேசு தருமபுரத்தில் ஒர் ஆசிரியைத் திருமணம் செய்து அங்கு வாழத் தொடங்கிய பின்னர், அவரது சகோதரியைத் திருமணம் செய்த தோழர் வேல்முருகு அவர்களும் குடும்ப சகிதமாக தருமபுரத்திலேயே குடியிருந்தார். எமக்குத் தொடர்ந்து அவருடன் தொடர்புகள் இருந்த போதிலும், அவர் தீவிரமான அரசியலில் பின்னர் ஈடுபட்டிருக்கவில்லை.

தோழர் வேல்முருகுவைவிட தீவிரமாக அரசியலில் ஈடுபட்ட பல தோழர்கள் கிளிநொச்சிப் பகுதியில் இருக்க, புலிகள் அவரை மட்டும் ஏன் கைதுசெய்து கொண்டு வந்துள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள என்னால் முடியவில்லை. அதேநேரத்தில் இன்னும் எத்தனை தோழர்களைப் புலிகள் கைதுசெய்து கொண்டு வரப்போகிறார்கள் என்ற சிந்தனையும் எனக்குள் எழுந்த வண்ணம் இருந்தது.

புதிதாக வந்தவர்களுடன் அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தையும் அறிந்துகொள்ள முடியாதால், எனது மனம் பலதையும் எண்ணித் தவியாய்த் தவித்தது.

தொடரும்

முன்னைய பதிவுகள்